அமைச்சரிடத்திலே சாதாரணமாகக் கேட்டு வாங்கக்கூடிய சில பிரச்சினைகளுக்கு பெரிய பிரச்சினைகளோடு எடுத்துக்காட்டாக நீங்கள் தெரிவிப்பது அவ்வளவு சரியாக இருக்காது.

313–

சங்ககிரி தொழிலாளர் மருத்துவமனையில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் ரத்த வங்கி அமைத்தல்

20484—*டாக்டர் வெ. சரோஜா:*

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி கழுகுமேட்டில் கட்டப்பட இருக்கும் தொழிலாளர் மருத்துவமனையில் விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவும், ரத்த வங்கியும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சங்ககிரி கழுகு மேட்டில் மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைப்பு ரீதியில்லாத தொழிலாளர்களை உள்ளடக்கிய தொழிலாளர்கள் நலனுக்காக ஒரு பொது புது சுகாதாரத் திட்டத்தைத் துவங்க உள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் சங்ககிரியில் சங்கர் சிமென்ட் பேக்டரி, கெம்பிளாஸ்ட் மற்றும் குமாரபாளையம், பள்ளிபாளையம் ஆகிய சுற்றுப்புறங்களில் தொழிலாளர்களை உள்ளடக்கிய கிராமங்கள் நிறைய இருப்பதால் தொழிலாளர்களுடைய நலனைக் கருதி சங்ககிரியில் தொழிலாளர் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் சங்ககிரியில் 2 மருத்துவர்களைக் கொண்ட டிஸ்பென்சரி தனியார் கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகின்றது. இதில் 2185 காப்பீட்டாளர்கள் இணைக்கப்பட்டு பயனடைந்து வருகிறார்கள். இ.எஸ்.ஐ. நிறுவனம் இதற்குத் தனியாகக் கட்டிடம் கட்டுவதற்காக 1.62 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைக் கையகப்படுத்தியிருக்கிறது. கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை ஆர்ஜிதம் செய்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மருத்துவமனையை நடப்பு ஆண்டிலேயே கட்டி செயற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 314, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

314–

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலைப் பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்குதல்

***24238*—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளில் தொழிற் பயிற்சிப் பள்ளி தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,